04.08.2026 STC 80/2018 DW1. சிவக்குமார்

கடந்த 08.07.2026ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு சாட்சி இன்று குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.08.2026.**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வகுப்பு படித்துள்ளேன் என்றால் 09ம் வகுப்பு படித்துள்ளேன். புகார்தாரரின் நண்பர் விகான் நெட்வொர்க் கம்பெனி வைத்திருப்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கம்பெனி நிறுவனம் எங்கு வைத்துள்ளார்கள் என்றால் அதை குறித்து எனக்கு தெரியாது நெட்வொர்க் கம்பெனியிலிருந்து வந்து சிலஇடங்களில் மீட்டிங் நடத்துவார்கள் அதில் நாங்கள் பங்கு பெறுவோம்.

2. மணிகண்டன், அலிராமன், வினோலி என்ற நபர்கள் அந்த நிறுவனத்தில் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த இரண்டு காசோலைகளில் எந்த காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த காசோலை எண் எனக்கு ஞாபகமில்லை. மற்றொரு காசோலையை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இல்லை.

3. இருசக்கர வாகனத்தை நான்கைந்து மாதங்கள் கொடுக்காத நிலையில், அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் இவ்வழக்கு விபரம் தெரிந்த பின்பு 22 வருடங்களுக்கு முன்பு புகார் கொடுத்தேன். புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நான் உண்மையில் புகார் கொடுக்கவில்லை என்பதால் தான் அந்த புகார்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆறாயிரம் பணத்திற்காக எதற்கு இரண்டு காசோலைகள் கொடுத்தேன் என்றால் எனக்கு அந்தளவிற்கு விவரம் இல்லாத காரணத்தினால் தெரியாமல் கொடுத்துவிட்டேன். நான் புகார்தாரரிடம் ரூ.1,10,000/-ம் கடன் வாங்கி கொண்டு காசோலை கொடுத்தேன்

என்றால் சரியல்ல. நான் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றாலும் அதனால் நான் தண்டனைக்குரிய நபர் என்றாலும் இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.